

சேரவாரும் ஜெகத்தீரே
மன்னார்குடி பானுகுமார்
ராஜம் பதிப்பகம்
இணையதளத்தில் banukumar.in

# சேரவாரும் ஜெகத்தீரே

ஞானிகள், தாங்கள் கண்ட பேரின்பத்தை எப்படியாவது உலகிற்குச் சொல்லிவிடவேண்டும்; எல்லோருடனும் பகிர்ந்து அனுபவிக்க வேண்டும் என்று துடியாய்த் துடிக்கிறார்கள். இது அவர்களுடைய பாடல்களைப் படித்தால் சொல்லாமலேயே விளங்கும்.

## திருமுருகாற்றுப்படை - உலகம் உவப்ப ........

ஒரு அரசனிடமோ அல்லது ஒரு வள்ளலிடமோ பரிசுகள் பெற்ற ஒருவன், எதிர் வரும் மற்றவனை அந்த அரசனிடமோ அல்லது வள்ளலிடமோ வழி சொல்லி அனுப்புவது ஆற்றுப்படை என்று அழைக்கப்படும். ஆற்றுப் படுத்துதல் என்றல் வழி காட்டுதல் என்று அர்த்தம்.

ஒரு புலவன் பரிசு பெற்றவுடன் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"– என்ற எண்ணத்துடன் மற்ற புலவர்களுக்கும் இந்த அரசன் இடத்தில் சென்றால் உங்களுக்கும் இந்தச் செல்வம் எல்லாம் கிடைக்கும் என்று கூறி வழிப்படுத்துவான்.

முருகனிடம் அருள் பெற்ற நக்கீரர் , மற்ற பக்தர்களை அவனிடம் வழி காட்டுவதாக அமைந்தது திரு முருகாற்றுப்படை என்ற நூல்.

அதில் முதல் பாடல்....

"உலகம் மகிழ்ச்சி அடைய, வானில் வலப்புறம் எழும் , பலர் புகழும் சூரியனை கடலில் இருந்து எழும் போது கண்டவர்களை போல , இமைப் பொழுதும் நீங்காமல் உயரத்தில் சுடர் விடும் ஒளி"

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி

இது என்ன பாடல். கடலில் எழும் சூரியனைப் போல உயரே சுடரும் வெளிச்சம். இது ஒரு பாடலா ? இதில் என்ன அர்த்தம் இருக்கிறது ? இதைப் படித்து என்ன ஆகப் போகிறது ? என்று கேள்விகள் எழலாம்.

சற்று சிந்திப்போம்.

உலகம் உவப்ப - உலகம் மகிழ.

முதலாவது, எதையும் மங்கலச் சொல்லோடு ஆரம்பிக்க வேண்டும் என்பது தமிழ் மரபு. உலகம் என்பது மிக உயர்ந்த மங்கலச் சொல்.

உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகு இலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே

என்று ஆரம்பித்தார் கம்பர்.

உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர் மலி வேணியன்;
அலகுஇல் சோதியன் அம்பலத்து ஆடுவான்;
மலர் சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவாம்.

என்று ஆரம்பித்தார் தெய்வப் புலவர் சேக்கிழார்.

உலகம் என்பது நல்லோர் மாட்டு என்பது நிகண்டு.

உலகம் என்றால் உலகில் உள்ளவர்களை குறிக்கும். குறிப்பாக உலகில் உள்ள நல்லவர்களை குறிக்கும்.

இரண்டாவது, உலகில் உள்ள அனைவரும் மகிழ என்று ஆரம்பிக்கிறார். இந்தியாவில் உள்ளவர்கள் மட்டும் மகிழ என்றோ, அல்லது இந்து சமயத்தில் உள்ளவர்கள் மட்டும் மகிழ என்றோ, அல்லது சைவ சமயத்தில் உள்ளவர்கள் மட்டும் மகிழ என்றோ குறுகிய மனத்தோடு ஆரம்பிக்கவில்லை.

உலகில் உள்ள அத்தனை மக்களும் இன்புற வேண்டும் என்று நினைக்கிறார். சேரவாரும் ஜெகத்தீரே என்று தாயுமானவர் அழைத்தார் போல.

## நாராயண மந்திரத்தை உலகுக்கு சொன்ன ராமானுஜர்!

திருக்கோஷ்டியூர் திருத்தலத்தில், கோயிலுக்கு அருகில் வசித்து வந்தார் திருக்கோஷ்டியூர் நம்பி.

இவரிடம் திருமந்திர உபதேசம் பெறுவதற்காக, வைணவ ஆச்சார்யரான ராமானுஜர் ஸ்ரீரங்கத்தில் இருந்து புறப்பட்டு நடந்தே இங்கு வந்தார்.

நம்பியின் வீட்டு வாசலில் நின்று கொண்டு அழைத்தார் ராமானுஜர்.

திருக்கோஷ்டியூர் நம்பி, ‘யார்?’ என்று கேட்டார்.

‘நான் ராமானுஜன் வந்திருக்கிறேன்’ என்றார்.

நம்பி வீட்டிற்குள்ளிருந்தபடியே, ‘நான் செத்து வா!’ என்றார்.

இதைப் புரியாத ராமானுஜரும் சென்றுவிட்டார்.

இப்படியாக, தொடர்ந்து 17 முறை ராமானுஜர் வந்தபோதும், நம்பி இதே பதிலைச் சொன்னார். பார்க்கக்கூட இல்லாமல் திருப்பி அனுப்பினார்.

---

அடுத்த முறை சென்ற ராமானுஜர் ‘அடியேன் வந்திருக்கிறேன்’ என்றார். அப்போதுதான் அவரை உள்ளே அழைத்தார் நம்பி.

‘ஓம் நமோநாராயணாய’ என்ற மந்திர உபதேசத்தை ராமானுஜருக்கு அருளினார். மேலும், மந்திரத்தை வெளியில் சொல்லக் கூடாது என்று கட்டளையிட்டார். மீறி எவருக்கேனும் சொன்னால் உனக்கு நரகம் கிடைக்கும் என்றும் எச்சரித்தார்.

ஆனால், ராமானுஜரோ நாராயண மந்திரத்தை எல்லோரும் அறிந்து கொள்ளவேண்டும். அதன் வாயிலாக பெருமாளின் திருவடியைச் சரணடைய வேண்டும். எல்லோருக்கும் பரமபதம் கிடைக்க வேண்டும் என எண்ணம் கொண்டார்.

நம்பியின் வீட்டில் இருந்து கிளம்பியவர், விறுவிறுவென கோயிலுக்குள் வந்தார். கோயிலின் விமானத்திற்குள் சென்றார். கோயிலின் உச்சியில் நின்றுகொண்டார்.

மக்கள் அனைவரையும் குரல் கொடுத்து அழைத்தார். இதோ... நம்மை உய்விக்கும் மந்திரம்... நாராயண மந்திரத்தை எல்லோரும் கேளுங்கள். சொல்லுங்கள். உங்களுக்கு பரமபதம் நிச்சயம். வைகுண்டம் கிடைப்பது உறுதி. மோட்சத்துக்குச் செல்வீர்கள் என்று மந்திரத்தை பெரும் குரலெடுத்து சொன்னார். மந்திரத்தை எல்லோருக்கும் உபதேசித்து அருளினார்.

அவ்வளவுதான். கடும் கோபம் கொண்டார் நம்பி. ராமானுஜரைக் கடிந்து கொண்டார்.

அவரிடம் ராமானுஜர் பணிவுடன் சொன்னார்... ‘எனக்கு நரகம் கிடைத்தாலும், மக்கள் நன்றாக வாழ்வார்களே, அதுபோதும்’ என்றார்.

---

இதைக் கேட்டு நெகிழ்ந்த நம்பி, 'நீ என்னிலும் பெரியவன், எம்பெருமானார்' என்று சொல்லி கட்டித் தழுவிக்கொண்டார்.

ஒரு சில ஞானியர் மட்டும், மனித குல நன்மைக்காக மிகவும் ஆர்வத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு நம்மிடையே திரும்பி ஓடிவருகிறார்கள்.

"கண்டேன், கண்டேன் கண்டேன்!! கண்ணுக்கினியன கண்டேன், தொண்டீர் எல்லோரும் வாரீர்"-- என்று ஆனந்தக் கூத்தாடி நம்மை எல்லாம் உய்விக்க முயற்சி செய்கிறார்கள்.

"அன்பர்களே வாரீர்" என நம்மை அழைக்கின்றனர். "சேரவாரும் ஜெகத்தீரே"-- என்று நம்மிடம் கெஞ்சுகின்றனர். அப்படியும் நாம் போகாவிட்டால் "கடைவிரித்தேன் கொள்வரில்லையே"--- என்று வருத்தப் படுகிறார்கள்.

இதே போல ஆயிரம் ஆண்டுகளாக ஞானிகள் நம்மிடம் கெஞ்சுகின்றனர். தயவு செய்து நான் சொல்லுவதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்களேன்.

ப்ளீஸ்! ப்ளீஸ்! ஒருமுறை இந்த சாப்பாட்டை அனுபவித்துவிட்டால் திரும்பி வீட்டிற்குப் போக மனம் வராமல் 'வீடுபேறு' அடைய ஓடுவீர்கள் என்று பாடுகின்றனர்.

உணவு விடுதிச் சாப்பாட்டில் கிடைத்தது எல்லாம் சிற்றின்பம். நாங்கள் சொல்லுவதோ பேரின்பம் என்று சொல்லி நமக்கு ''இன்னும் புரியவில்லையே''– என்று கதறுகின்றனர். இருந்தபோதிலும் நாம் கேட்பதாகத் தெரியவில்லை.

இதோ பாருங்கள்:–

நம்மாழ்வார் துடிப்பு !
கண்டோம், கண்டோம், கண்டோம்; கண்ணுக்கு இனியன கண்டோம்;
தொண்டீர்; எல்லீரும் வாரீர்; தொழுது தொழுது நின்று ஆர்த்தும்;
வண்டு ஆர்த் தண்ணந் துழாயான் மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்தான் பாடி நின்று, ஆடி, பரந்து திரிகின்றனவே. நம்மாழ்வார் திருவாய்மொழி

நம்மாழ்வாரோ எனில் "கண்டுவிட்டேன், இது போன்ற இனிய காட்சி உலகிலேயே கிடையாது எல்லோரும் ஓடி வாருங்கள் என்று கூத்தாடுகிறார். வண்டுகள் மொய்க்கும் துளசிமாலை அணிந்த மாதவனைக் கண்டுவிட்ட மகிழ்ச்சி அவருக்கு!



புவியுள் நான் கண்டதோர் அற்புதம் கேளீர்!

பெரியாழ்வார் இதற்கெல்லாம் ஒருபடி மேலே சென்று உலக அற்புதம் ஒன்றைக் கண்டு பிடித்துவிட்டதாக அறிவிப்பு வெளியிடுகிறார்.

அவர் பார்த்த அற்புதத்தை நாமும் பலமுறை பல இடங்களில் பார்த்திருக்கிறாம்.

ஆனால் கண்டும் காணவில்லை. அதனால் அவர் போல பூரிப்பு அடையவில்லை!. அனுபவித்தவர்க்கல்லவா அதன் அருமை பெருமைகள் தெரியும்!

கண்ணன் ஊதிய புல்லங்குழல் ஓசை செவிக்கு உணவாகக் கிடைத்தது. அதை அருந்த வானவர் (தேவர்கள்) எல்லாம் வந்துவிட்டனர் என்கிறார்.

புவியுள் நான் கண்டதோர் அற்புதம் கேளீர்!
பூணிமேய்க்கும் இளங்கோவலர் கூட்டத்து
அவையுள் நாகத்து அணையான் குழல் ஊத
அமரலோகத்தளவும் சென்றிசைப்ப
அவியுணா மறந்து வானவர் எல்லாம்
ஆயர்பாடி நிறையப் புகுந்து ஈண்டி,
செவியுள் நாவின் சுவைகொண்டு மகிழ்ந்து
கோவிந்தனைத் தொடர்ந்து என்றும் விடாரே. -பெரியாழ்வார்

## யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்




திருமூலர் ஒருபொதுவுடைமைவாதி. கிடைத்ததை எல்லோருக்கும் சமமாகக் கொடுக்கவேண்டும் என்று கருதி நான் நமச்சிவாய மந்திரத்தைச் சொல்லி பேரின்பம் அடைந்தேன். அது எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்று பாடுகிறார்.

யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்,
வான் பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடில்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்,
தான் பற்றப் பற்றத் தலைப்படும் தானே. திருமூலர், திருமந்திரம்

## மனிதர்காள் இங்கே வாருங்கள் !! ஒன்று சொல்லுகிறேன்!!!



அப்பர் பெருமான் மிகவும் தெளிவாகப் புரியும்படி சொல்லுகிறார். ஏ, மனிதர்களே இங்கே வாருங்கள். ஒன்றே ஒன்றுதான் சொல்லப்போகிறேன்.

நான் மிக மிக இனிப்பான மாம்பழம் தந்தால் மாம்பழம் சாப்பிடுவீர்களா? சரி, நெய் மணத்துடன் இருக்கும் செவ்வாழைப் பழம் தருகிறேன் சாப்பிடுவீர்களா?

இதைக் கேட்ட கூட்டம் ஆமாம் ,சாப்பிடுவோம் என்றது. இதைவிட இனிப்பான இறையருள் என்னும் கனி தருகிறேன். வாருங்கள் என்கிறார்.

மனிதர்காள் இங்கேவம் ஒன்று சொல்லுகேன்
கனி தந்தால் கனி உண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசன் னும் கனி
இனிது சாலவும் ஏசற்றவர்கட்கே. திருக்குறுந்தொகை, 5ஆம் திருமுறை, அப்பர்.

## அன்பர்களே வாரீர்!



வேதாத்திரி மகரிசி அழைப்பு கவி பாடல்.

அன்பர்களே வாரீர் ! அறிவின் இருப்பிடம் அறிந்து இன்பமுற இன்பநிலையதை
ஏகநிலையதை அன்பு நிலையதை அறிந்திடலாம் இன்று
தின்று திரிந்து உறங்கவோ பிறந்தோம் என்று நினைந்ததால் ஏனென
உணர்ந்தோம்
அன்றாட வாழ்வை அறிந்தனுபவிக்க இன்றேனும் விரைந்து எழுச்சி பெற்றுய்வீர்
பூரணதூலமும் பொருந்து சூக்குமம் காரணமான கருவையு மறிந்து
ஆரணமான அனுவறிந்து சுடர் தாரக மவுன தவத்தில் நிலைபெற

---

எத்தனை ஆயிரம் ஆயிரம் இன்பங்கள் இவ்வுலகெங்கும் பேரண்ட முழுமையும்
அதன் அருளாட்சியாக நிறைந்துள்ளான் அறிவை விரித்து அனைத்தும்
துய்த்தின்புற
நீங்களும் உங்கள் அன்புக் குடும்பமும் நீளாயுள் உடல்நலம் நிறைசெல்வம்
மெய்ஞ்ஞானம்
ஓங்கிச் சிறப்புற்று உள்ள நிறைவோடு உள்ளொளி பெருக்கி ,உண்மைப்பொருள்
காண" - தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி

அன்பர்களே வருவீர்களாக! அறிவு எங்கே. எப்படி உள்ளது என்பதை அறிந்தால், இன்புறலாம்.

இன்ப நிலையான அறிவு ஒரே நிலையாக எலலாவற்றிலும் இருப்பதை இன்று அறிந்து கொள்ளலாம்.

விலங்கினங்கள் வரை நில உலகில் வாழ்கின்ற சீவ இனங்கள் அனைத்தும்உண்டு, உறங்கி, உயிர்த்து, மடிந்தும் விடுகின்றன.

மனிதனாகிய நாமும் அதையே செய்தால் ஆறாவது அறிவின் காணரமென்ன என்று எண்ணியதால் உண்மை நிலையை உணர்ந்தோம்.




ஒவ்வொரு நாளும் வாழ்கின்ற வாழ்க்கையைப் பற்றி அறிந்தும், வாழ்க்கையை இனிமையாக அனுபவிக்கவும் இன்றைக்காவது விரைவாக துயில் களைந்து, புறப்பட்டு வந்து எழுச்சி பெற்று வாழ்வீர்களாக!

பூரணப் பொருளான இறைநிலையே தூல உடலாகவும், உடலை இயக்கும் சூக்குமமான உயிராகவும் இருக்கின்ற காரணத்தையும், கருப்பொருளையும் அறிந்து கொள்வீர்களாக!

(ஆரணம் = வேதம்) வேதங்களிலே சொல்லப்பட்டுள்ள இறைநிலையே அணுவாக மலாச்சி பெற்று, அணுக்கள் கூடி அனைத்துமாக ஆகியிருப்பதையும், அறிவின் தெளிவில் மௌன தவத்தில் ஈடுபட்டு உணர்வீர்களாக!

அளவிட முடியாத இன்பங்கள் நில உலகிலும், பிரபஞ்சம் முழுவதிலும் (அத்தன் = இறைவன்) இறைநிலையின் அருள் ஆட்சியாகவே நிறைந்திருப்பதை, அறிவை உயர்த்தி விரித்து அனைத்தையும் அனுபவித்து இன்புறுவீர்களாக!

- நீங்களும் உங்கள் அன்புக் குடும்பமும், நீண்ட ஆயுளுடனும், உடலநலத்துடனும், வாழ்க்கைச் செல்வங்கள் அனைத்தையும் நிறைவாக அடைந்து, இறை உணர்வாகிய மெய்ஞானத்தையும் உணர்ந்து. மனநிறைவடன் அகநோக்குப் பயணத்தின் மூலம் உள் ஒளியாகிய தெய்வீகத்தைப் பெருக்கிக் கொண்டும், உண்மைப் பொருளான அறிவே தெய்வமாக உள்ளது என்பதை உணர்ந்து கொண்டும் இனிமையாக வாழ்வதற்காக அழைக்கின்றேன்! அன்பர்களே வருவீர்களாக!

## சேரவாரும் ஜெகத்தீரே! தாயுமானவர் அறைகூவல்

காடும் கரையும் மனக்குரங்கு கால் விட்டோட அதன்பிறகு
ஓடும் தொழிலால் பயனுளதோ ஒன்றாய் பலவாய் உயிர்க்குயிராய்
ஆடும் கருணைப் பரஞ்ஜோதி அருளைப் பெறுதற்கு அன்புநிறை
தேடும் பருவம் இதுகண்டீர் சேரவாரும் ஜெகத்தீரே! (தாயு.பா.553- காடும்கரையும்1)

மனம் ஒரு குரங்கு. ஓயாமல் தாவிக்கொண்டே இருக்கும். அதன் பின்னால் அலைந்து 'மனம் போன போக்கில் போய்' நேரத்தை வீண் அடிப்பதில் என்ன பயன்?



காட்டிலும் மேட்டிலும் மனமாகிய குரங்கு கால் வைத்துப் பாய்ந்து ஓட.

அதன் பிறகு ஓடிஓடி தொழில் செய்வதால் என்ன பயன விளையப் போகிறது?

எல்லை இல்லாத கருணயுடைய அன்பு நிறைந்த கடவுளின் அருளைப் பெற அருமையான மனிதப் பிறவி கிடைத்திருக்கிறது.

ஒன்றாகவும், பலவாகவும், உயிருக்கு உயிராகவும், ஆடும் அருள்சோதியாக விளங்கும் நடராசப் பெருமானின் திருவருளைப் பெறுவதற்கு அன்பைத் தேடிப் பிடித்துப் பாய்ச்சும் பருவம் இதுவாகும்.

உலகரே! நீங்களும் உடன் வாருங்கள்!

வாருங்கள்! வாருங்கள்!! என்னுடன் சேருங்கள் !!!நாம் எல்லோரும் சேர்ந்து பயணம் செய்வோம் என்று தாயுமானவர் கூப்பிடுகிறார்.

தாயுமானவர் அழைப்பை ஏற்போம்! ஆனந்தக் களிப்படைவோம்!!